பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் பரிதாப மரணம்

கிளிநொச்சி, பொன்னகர் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகன மும்மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 30 புதன்கிழமை 13.03.2024 அதிர்வு 226



### வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைதாகி

# விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 5 பேர் நீதி கோரி உண்ணாவிரதப் போராட்டம்

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், தமக்கு நீதி கோரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஐவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

04

# சிவலிங்கத்தைச் சுற்றியிருக்கும் வெள்ளை நாகம்

### சமூக வலைத்தளங்களில் வைரலாகும் காணொளி





எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு – காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள சிறு கோயிலில் சிவலிங்கத்தை வெள்ளை நாகம் சுற்றியிருக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை தெற்கு பகுதியில் உள்ள தகரங்களால் வேயப்பட்ட சிறு கோயிலிலேயே குறித்த காணொளி இராணுவத்தினரால் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் சிறு அம்மன் கோயிலில் பிள்ளையார்,

04

# வெடுக்குநாறிமலைப் பிரச்சினை; ஒன்றுகூடி ஆராய விக்கி அழைப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

வெடுக்குநாறிமலை பிரச்சினை தொடர்பாக ஒன்றுகூடி ஆராய்வதற்கு தமிழ் தேசியம் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.



வவுனியா வெடுக்குநாறி மலையில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளை மேற்கொண்டவர்களை பொலிஸார் கடுமையாகத் தாக்கி கைது செய்திருந்தனர். அத்தோடு ஆலய பூசகர் உட்பட எட்டு பேர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இதுதொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆராயும் விதமாக தமிழ்த் தேசியம் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரலாற்று பேராசிரியர்களுக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி காலை 11 மணியளவில் கோவில் வீதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாட வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியரும் யாழ் பல்கலைக்கழக வேந்தருமாகிய பத்மநாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியரான புஷ்பரட்ணம் ஆகியோருக்கும் மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை சம்பவங்கள் அரசாங்கத்தின் இரகசிய நோக்கங்களை எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த நிலையில் எமது தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்று கூடி எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை தீர்மானிப்பது அவசியமாகும். நாடாளுமன்றத்தை புறக்கணிக்க வேண்டும் என்று கோரிக்கை ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சிலர் நாடாளுமன்றத்திற்குள் ஒரு போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்கின்றனர். நாம் எடுக்கும் எந்த நடவடிக்கையாக இருப்பினும் அவை ஒன்றுபட்ட முயற்சியாக இருக்க வேண்டியது அவசியம்.

அமைச்சரின் வேண்டுகோளுக்கு ஏற்ப வெடுக்குநாறி சம்பவம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி குழுவொன்றை நியமிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். இந்த குழுவை அமைப்பவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

எனவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பின் போது பேராசிரியர் பத்மநாதன் மற்றும் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பியுள்ளேன்.

கௌரவ கஜேந்திரன் சம்பவ இடத்தில் இருந்ததாலும் பெறுமதியான தகவல்களை வழங்கக்கூடியவர் என்பதாலும் அவரையும் அழைத்துள்ளேன். கௌரவ சுமந்திரன் அவர்கள் கைது செய்யப்பட்டவர்களுக்காக நீதிமன்றில் ஆஜராகியிருப்பதால் எமக்கு மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்க முடியும் அவரையும் அழைத்துள்ளேன்.

16ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு 232, கோவில் வீதி, நல்லூரில் உள்ள எனது இல்லத்தில் சந்திப்போம் என்று பரிந்துரைக்கிறேன். எங்களுடன் இணைவீர்களா எனத் தெரிவிக்கவும்.மேலும் கடந்த திங்கட்கிழமை நல்லூரில் நடைபெற்ற போராட்டத்தில் பல் பிடுங்கப்பட்டதால் என்னால் பங்கேற்க முடியவில்லை" - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.





# வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களுக்கு நியமனக் கடிதங்கள்

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய பிரதம செயலாளர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண பிரதமச் செயலாளராக எல்.இளங்கோன் மற்றும் வடமேல் மாகாண பிரதமச் செயலாளராக தீபிகா கே குணரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்றுக் கையளித்தார்.

இலங்கை நிர்வாகச் சேவையின் தலைசிறந்த அதிகாரியான எல்.இளங்கோவன் வடக்கு மாகாண அமைச்சுக்கள் பலவற்றின் செயலாளர் பதவி வகித்தமையுடன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

எல்.இளங்கோவன் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமனம் பெறும் வரை, வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# இலங்கையைச் சேர்ந்த வயதான தம்பதி ஆஸ்திரேலியா வீடொன்றில் சடலமாக!

ஆஸ்திரேலியாவில் வீடொன்றில் இருந்து வயதான, இலங்கையை பூர்விகமாக கொண்ட தம்பதியினர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் சுமார் 80 வயதுடைய டோய்ன் காஸ்பர்ஸ் மற்றும் மர்லீன் காஸ்பர்ஸ் என விக்டோரியா பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று (12) இவர்கள் இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் அந்த நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட மாற்றுதிறனாளி!

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை பகுதியில் மாற்றுத் திறனாளி ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த தனபாலசுப்பிரமணியம் சுஜீவன் என்ற 32 வயதுடையவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் அடிப்படையில் இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உயிரிழந்தவரின் சகோதரி ஒருவர் கனடாவில் வசித்து வரும் நிலையில் இறந்த நபருக்கும், அவரது தாயாருக்கும் கனடாவுக்கான சுற்றுலா விசா கிடைத்துள்ளது. எனினும் அந்த நபருக்குக் கனடா செல்வதில் விருப்பம் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனது சக்கர நாற்காலியைக் கிணற்றுக்கு அருகே நிறுத்திவிட்டு விபரீத முடிவெடுத்துள்ளார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் நேற்று (12) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தொண்டையில் சிக்கிய மாத்திரை; பறிபோனது சிறுமியின் உயிர்!



காய்ச்சல் காரணமாக பாட்டி கொடுத்த மாத்திரை ஒன்று சிறுமியின் தொண்டையில் சிக்கியதில் நான்கு வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்திரை தொண்டையில் சிக்கியதில் மயக்கமடைந்த சிறுமி மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஓஷதி சவிந்தயா ராஜபக்ஷ என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

தாய் வெளிநாடு சென்றுள்ளதால் தாத்தா, பாட்டி மற்றும் இரண்டு சகோதரிகளுடன் வசித்து வந்துள்ளார்.

தந்தை அவர்கள் வசிக்கும் வீட்டுக்கு அருகில் உள்ள வேறொரு வீட்டில் வசித்து வருகிறார் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டாராம்

## இப்படி அடித்துக் கூறுகின்றது சஜித் அணி



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் எஸ்.எம். மரிக்கார் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார். தோல்வி எனத் தெரிந்தால் அதில் போட்டியிடாமல் இருக்கும் முடிவை 2005 ஆம் ஆண்டிலேயே அவர் எடுத்துவிட்டார். தற்போது ஆய்வு நடத்துகின்றார். அதில் தோல்வி எனத் தெரிந்தால் போட்டியிடமாட்டார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அவர் களமிறங்கும் முடிவில் இருக்கவில்லை. ஆனால், கொழும்பில் ஓர் ஆசனம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கும் என நாம்கூட நம்பினோம். ஆனால், ஓர் ஆசனம் கூட ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் மாத்திரமே கிடைத்தது.

ஆக ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பதை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மொட்டுக் கட்சி வாய்ப்பு வழங்கினால்கூட அவர் வரமாட்டார். போட்டியிடப்போவதில்லை என்பதை முன்கூட்டியே அறிவித்துவிட்டால் ஜனாதிபதியின் உத்தரவுகளை சிலர் ஏற்காமல் இருக்கக்கூடும். அதனால்தான் கடைசி வரை அவர் மௌனம் காப்பார்." - என்றார்.

# நானுஓயா பகுதியில் பாடசாலை மாணவியை வன்புணர்ந்த 52 வயது நபருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை

**(ஆ.ரமேஸ், செ.தி.பெருமாள்)**

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட 52 வயதுடைய நபருக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரியவால் இந்தத் தீர்ப்பு இன்று பகல் வழங்கப்பட்டது.

கடந்த 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த பாருக் மொஹமட் சாலித் என்ற நபர், அதே பகுதியைச் சேர்ந்த 16 வயதுக்குக் குறைவான பாடசாலை சிறுமி ஒருவரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பாடசாலை ஊடாக சிறுமியின் பெற்றோருக்குத் தெரிய வந்ததையடுத்து, அந்த நபர் மீது நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து விசாரணை நடத்தப்பட்டது.

அதன்பின்னர் அவருக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், வழக்குக்கான தீர்ப்பு இன்று வழங்கப்பட்டது.

இதன்போது சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பாருக் மொஹமட் சாலித் (வயது 52) என்ற நபருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய 10 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

அத்துடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, இந்தத் தொகையைப் பாதிக்கப்பட்டவருக்கு வழங்காத பட்சத்தில் குற்றவாளி மேலும் மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டார்.

குற்றவாளி நீதிமன்றத் தண்டனைப் பணமாக 15 ஆயிரம் ரூபாவைச் செலுத்த உத்தரவிட்ட நீதிபதி, இந்தத் தண்டனை பணத்தைச் செலுத்தாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சிவலிங்கத்தை...**

சிவலிங்க உருவச் சிலைகளும், இலட்சுமியின் உருவப்படமும் வைத்துக் காணப்படுகின்றன.

பௌர்ணமி தினங்களில் பாம்புகள் அடிக்கடி அந்த ஆலயத்துக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கும் இராணுவத்தினர், அவ்வாறு ஒருமுறை வந்த போதே குறித்த காணொளி எடுக்கப்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி பலராலும் பகிரப்பட்டு வருகின்றது.

**விளக்கமறியலில்...**

அவர்களை கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் நேற்று (12) வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்று காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தினர் என்று மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து மேற்படி 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இவர்களை இன்று காலை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் விளக்கமறியலில் உள்ளவர்களின் உறவினர்கள் பார்வையிடச் சென்றிருந்தனர். இதன்போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 8 நபர்களின் ஐவர் நேற்றுக் காலை தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறிப்பாக நேற்றுக் காலை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்படும்போதே அவர்கள் உணவை எடுத்திருக்கவில்லை. இந்நிலையில், இன்றைய தினமும் அவர்கள் உணவை உட்கொள்வதற்கு மறுத்துள்ளனர்.

ஆலயப் பூசகர் மதிமுகராசா, திலகநாதன் கிந்துஜன், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், துரைராசா தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய ஐந்து பேரும் நேற்றுக் காலையிலிருந்து நீதி கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**கிளிநொச்சி விபத்தில்...**

கிளிநொச்சி - பொன்னகர் பகுதியைச் சேர்ந்த சந்தானம் புஷ்பராஜ் என்ற 34 வயதுடைய நபரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொத்துவில் விடுதி ஒன்றில் இருந்து ஆண், பெண் சடலங்கள் இரண்டு மீட்பு



அம்பாறை பொத்துவிலில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் இருந்து இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்கள் ஆண் மற்றும் பெண்ணின் உடையது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


பொத்துவில் – அறுகம்பே பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்தே நேற்று (12) இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அறையில் தங்கியிருந்த இருவரும் கதவை திறக்காததால் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து விடுதி முகாமையாளர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். அதனை அடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர்.

இந்த நிலையில் அறையில் இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண்ணை மீட்டனர்.

அதே நேரத்தில் ஆண் குளியலறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் மஹகளுகொல்ல பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடையவர் எனவும்,ஆண் புத்திவிலைச் சேர்ந்த 51 வயதானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். புத்திவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# முட்டைக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை முன்னெடுப்பு

முட்டைக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலத்தில் முட்டை விலை அதிகரிப்பைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியாளர்களுக்கும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் இன்று நேற்று (12) விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இது தொடர்பாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சந்தையில் 50 ரூபாவை விடவும் குறைந்த விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதில்லை.

இதேவேளை பொருளாதார மத்திய நிலையங்களில் இந்த விலைக்குக் குறைவாக முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அந்த விலையில் சாதாரண மக்களுக்கு முட்டைகள் கிடைப்பதில்லை.

இந்த நிலையில், எதிர்வரும் பண்டிகை காலத்தில் முட்டையின் விலையைக் குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தியாவின் புதிய சட்டம்

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் - கடைசி நேரத்தில் - பிரதமர் மோடியின் அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் இந்தியாவிலும், தமிழகத்திலும் மட்டுமல்லாமல், ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களிலும் பேசு பொருளாகியிருக்கின்றது.

பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து 2014க்கு முன்னர் வந்து இந்தியாவில் குடியேறிய இந்து, பார்சி, சீக்கிய, ஜெயின், பௌத்த, கிறிஸ்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமையை பெரும் இழுபறி, சிக்கலின்றி வழங்குவதற்கு வழி செய்யும் சட்டமே இப்போது நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியா முழுவதிலும் பெரும் போராட்டங்களையும், எதிர்ப்புக்களையும் கிளப்பியச் இச்சட்டமூலம் இந்திய நாடாளுமன்றத்தில் 2019 நிறைவேற்றப்பட்ட போதிலும், இப்போது பொது தேர்தல் அறிவிப்புக்கு இன்னும் ஓரிரு மாதங்களே இருக்கையில், நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக மோடி அரசு அறிவித்து இருக்கின்றது.

வெளிநாட்டவர்களுக்கு பிரஜா உரிமை அளிப்பதில் சில அயல்நாடுகளை மாத்திரம் தேர்ந்தெடுத்து, அவற்றில் சில மதப் பிரிவினருக்கு மட்டும் தனியாகப் பிரித்து, அவர்களுக்கே பிரஜா உரிமை என்ற இந்த சட்டம் அதனால் பாகுபாடு காட்டுவது, பிரித்தாள்வது என்றெல்லாம் மோசமாக விமர்சிக்கப்படுகின்றது.

மூன்று இஸ்லாமிய நாடுகளின் இஸ்லாமியர்களைப் புறக்கணித்து, புறமொதுக்கி, ஏனையவர்களுக்கு மட்டுமே இந்தியாவில் குடியுரிமை என்ற தனித்துவ ஏற்பாடு ஒருபுறம் சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றது.

மறுபுறம் பல்லாயிரம் ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் நீண்டகாலம் தஞ்சம் புகுந்து இருக்கையில் அவர்களைக் கவனிக்காமல், அவர்கள் குறித்து சிந்திக்காமல், புறமொதுக்கி இந்தச் சட்டம் விசித்திரமான விதத்தில் கொண்டுவரப்படுகின்றது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது கடும் எதிர்ப்புத் தமிழகத்திலும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் தேசங்களிலும் கிளர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

1980களிலிருந்து இலங்கையில் தமக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இன வழிப்புக்கு முகம் கொடுக்க முடியாமல், தப்பிப் பிழைத்து, உலகம் முழுவதும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். 1990 இல் இது உச்சத்தைத் தொட்டது.

தமது தாயகத்திலிருந்து பூமிப்பந்தெங்கனும் தமது வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கி வீசப்பட்ட ஈழத் தமிழர்கள், தாம் குடிபுகுந்த இடங்களில் எல்லாம் தங்களை ஸ்திரப்படுத்தி நிலை நிறுத்திக் கொண்டார்கள் - இந்தியாவை, குறிப்பாக தமிழகத்தைத் தவிர.

இந்தியா அல்லாத தேசங்களில் புலம் பெயர்ந்த சுமார் பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் பெரும்பாலும் சில ஆண்டுகளிலேயே அந்தந்த நாடுகளின் குடியுரிமை பெற்று அங்கங்கு தங்களை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொண்டனர்.

ஆனால் 90 இல் ஏற்பட்ட மோசமான நிலைமையை அடுத்து படகுகளில் சென்று இந்தியாவின் தமிழகத்தில் ஏதிலிகளாக தஞ்சம் புகுந்த இரண்டு லட்சம் தமிழர்களுக்கு, நாற்பது ஆண்டுகள் கடந்தும் குடியுரிமையோ குறிப்பிடத்தக்க வசதிகளோ வழங்கப்படவில்லை. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்வைத் தக்க வைப்பதற்காக தமிழகத்தில் தஞ்சம் புகுந்த நம் மக்கள் அங்கு நலனோம்பு மையங்கள் என்ற அகதி முகாம் கட்டமைப்பிலேயே அடைத்து வாழ நிர்பந்திக்கப்பட்டனர்.

புலம்பெயர்ந்து மூன்றாவது தலைமுறையை கண்டும் கூட, குடியுரிமை கூட கிட்டாத நிலையில், அந்த மக்களில் கணிசமானோர் அதன் காரணமாக தாயகம் திரும்பினர். அல்லது வேறு புலம்பெயர் தேசங்களுக்கு இடம்பெயர்ந்து தங்கள் வாழ்வை நிலைப்படுத்தி கொண்டனர். இப்போது மிச்சமாக சுமார் 75 ஆயிரம் பேர் தமிழகத்தில் பெரும்பாலும் முகாம்களில் முடங்கி கிடக்கின்றனர்.

பாகிஸ்தானின் இஸ்லாமியர்களைப் போல ஈழத்தின் தமிழர்களுக்கும் குடியுரிமை இந்தியாவில் இல்லை என்பதுதான் மோடி அரசு காட்டும் முடிவு. 2014க்கு முன்னர் வந்த ஏனையவர்களுக்குக் குடியுரிமை உண்டு, ஆனால் 1990 களிலேயே வந்து இந்தியாவில் நிலை கொண்டு விட்ட ஈழத் தமிழர்களுக்கு அந்த உரிமை இல்லை என்பதுதான் உறுதியான நிலைப்பாடு.

ஈழத் தமிழர்கள், அவர்களின் தாயகத்தில் சம உரிமைகளோடும், கௌரவத்தோடும், அதி உயர் அதிகாரப் பகிர்வுடனும், தங்கள் விடயங்களைத் தாங்களே கவனிக்க கூடிய ஏற்பாட்டின் அடிப்படையிலான ஒரு நிரந்தர தீர்வை பெற்று, வாழ வேண்டும் என்பதே இந்திய அரசின் கொள்கைப் போக்கு என இந்திய தரப்பினால் கூறப்படுகின்றது. அவர்களுக்குக் குடியுரிமை தராமல், மேற்படி உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க இந்திய அரசு முயலுமென இந்தியத் தரப்பில் விளக்கமும் கூறப்படக்கூடும்.

'பின்னடைவிலும் நன்மை இது' என்று இதனை எடுத்துக் கொண்டு, தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்து, நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இன்னும் ஏதிலிகளாக அங்கு வாடும் நமது சகோதரர்களுக்கு, நம் தாயகத்திலேயே - ஈழத் தமிழ் மண்ணிலேயே - அவர்களின் பூர்வீக வாழிடத்திலேயே - நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்து, நம்மைப் பலப்படுத்திக் கொள்வதுதான் சாலச் சிறந்தது.

# யாழ். மாவட்ட இளையோருக்கு இலவசமாக ஜப்பான் மொழி!

(ந.லோகதயாளன்)

ஜப்பானில் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வசிக்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இலவசமாக ஜப்பான் மொழி கற்பிக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் சமுர்த்திப் பணிப்பாளர் சத்தியசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் சமுர்த்திப் பணிப்பாளர் சத்தியசோதி மேலும் விபரம் தெரிவிக்கையில்,

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா ஒரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அனைத்து நிலையங்களிலும் 50 மாணவர்கள் என்ற அடிப்படையில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

ஜப்பான் மொழியைக் கற்க விரும்புபவர்கள் சமுர்த்தி பயனாளிகள் குடும்பமாகவோ அல்லது குறைந்த வறுமானம் பெறும் குடும்பமாகவோ இருக்கலாம்.

இந்தக் கற்கை நெறியானது ஒரு வருட காலத்துக்குள் 300 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும். ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும். க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தரம் கற்றவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இந்தக் கற்கை நெறியை பூர்த்தி செயபவர்கள் ஜப்பானில் விவசாயம், பராமரிப்பு, உணவு பரிமாரல் போன்ற பணிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்குப் பயணிக்க முடியும்.

இதேநேரம் ஜப்பன் மொழியைக் கற்கவோ அல்லது ஜப்பான் நாட்டுக்குப் பயணிக்கவோ விரும்பும் எந்தவொரு இளைஞர், யுவதிகள் உடம்பின் எந்தவொரு பாகத்திலும் பச்சை குத்தியிருந்தால் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.






# விழிப்புல வலுவிழந்த மாணவர்கள் 4 பேருக்கு யாழ். பல்கலையில் பட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாளை 14ஆம் திகதியும் மறுநாள் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ள 38 ஆவது, பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 விழிப் புல வலுவிழந்த மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர்.

ஸ்ரீதரன் யோகதாஸ் மொழி பெயர்ப்புக் கற்கையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், பொன்னம்பலம் தீபன், கலாமோகன் பிரகான் ஆகியோர் இந்து நாகரிகத்தில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும்,திருமதி பிரகான் வானுஜா பொதுக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய சங்காபிஷேகமும் நூல் வெளியீடும்




வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வும் 'மரகதம்' வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

அதேவேளை, வரலாற்று பாரம் பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு முதல் வரலாற்று நூலான 'மரகதம்' நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் காலை 11 மணிக்கு ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபை ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந்த நூல் வெளியீட்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைக்கப்பட்டுள்ளார்.

முதன்மை அதிதியாக ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆன்மீக அதிதியாக இராம கிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதிகளாக வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேத.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

# ‘தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்’ பதாகை காட்சிப்படுத்தல் மட்டக்களப்பில் ஆரம்பம்

## மார்ச் 12 இயக்கத்தினர் ஏற்பாடு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் ‘தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்’ எனும் தொனிப் பொருளில் தூய அரசியலுக்காக விழிப்புணர்வுப் பதாகை காட்சிப்படுத்தல் நேற்று செவ்வாய்க் கிழமை (12) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வளாகத்தில் மார்ச் 12 இயக்கத்தினர் ஆரம்பித்து வைத்தனர்.

தேசிய மட்ட மார்ச் 12 இயக்கமானது எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களைக் கருத்தில் கொண்டு தூய அரசியலுக்காக அரசியல் ஆட்சியாளர்களை உருவாக்கும் நோக்குடன் இதனை மேற்கொண்டுள்ளது.

இந்த ‘தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்’ எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பதாகையினை காட்சிப்படுத்தும் மாவட்டத்துக்கான நிகழ்வு மார்ச் 12 இயக்கம் இணைப்பாளர் சபா.சிவயோகநாதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

இதில் சமூக செயற்பாட்டாளர்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் பிரதிநிதகள் பெண்கள் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகள் நாடக ஆற்றுகை 21இல் ஆரம்பம்!






திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வரும் மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு ‘வேள்வித் திருமகன்’ என்னும் பெயரில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 ,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்துக்கு ஏற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது.

இந்த முறை மேடையேற்றப்படும் ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகளின் காட்சி முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படவுள்ளது.

இந்த முறை இதற்கான நெறியாள்கையை மன்ற அரங்கக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்..

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தை தமிழ் மரபுக்கு உரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார்.

திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரிய சேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே ‘வேள்வித் திருமகன்’.

மரிய சேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழி நடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

வழமை போலவே பிரமாண்டமான அரங்கஅமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் ‘வேள்வித் திருமகன்’ அரங்கேறத் தயாராகியுள்ளது.

# வலுவிழந்தோருக்கு உபகரணம்!



(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவால் சக்கர நாற்காலி, ஊன்று கோல், நடை சட்டம் , கைமிதி வண்டி என 14 உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ. ஜீ.அர்சாத் தலைமையிலான இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் பீ .ரீ. எம்.இர்பான் கலந்து கொண்டு இந்த உபகரணங்களை வழங்கினார்.

சமூக சேவைப் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.



# பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

நிலையான கல்வியை நிலையில்லா வறுமையை காரணம் காட்டி விட்டுவிடக்கூடாது எனும் நோக்கில் இன, மத மற்றும் பிரதேச பாகுபாடு இன்றி தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசன் உதவி வருகின்றது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலய மாணவர்களுக்கு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனின் தலைவி மர்யம் மன்சூர் நளிமுதீன் மற்றும் பௌண்டேசனின் தவிசாளர் டாக்டர் எஸ்.நளிமுதீன் ஆகியோரால் வருடத்துக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.




இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மாணவர்களின் நல்வாழ்வை மேம்படுத்த துறைசார்ந்த அதிகாரிகளுக்குப் பயிற்சி





(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மற்றும் புறச்சூழலில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தி அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர்களுடன் தொடர்புபட்ட கல்வி மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளை தெளிவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் பயிற்சி செயலர்வு அண்மையில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய், சேய் நலன் பிரிவு இந்தப் பயிற்சிச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களிலிருந்தும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் உளநல ஆரோக்கியம், பாடசாலை பருவத்தில் நிகழும் உடல், உள மாற்றங்கள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மன அழுத்தம், மாணவர்களை பகடிவதை செய்தல், தகவல் தொழில்நுட்பமும் அதன் ஊடாக ஏற்படும் சாதக பாதகங்களும், போதைவஸ்து பாவனையில் ஈடுபடுவதற்கான அடிப்படை காரணங்களும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகளும், விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கண்டறிதலும் மருத்துவ ஆலோசனையும் போன்ற பல்வேறு தலைப்புகளில் விரிவுரை யாற்றப்பட்டது.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், பிராந்திய உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்தியர் யூ.எல்.சராப்டீன், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.என்.றொஸானந் ஆகியோர் பயிற்சிச் செயலமர்வில் விரிவுரை யாற்றினர்.

பாடசாலையோடு தொடர்புடைய துறை சார்ந்த உத்தியோகத்தர்களை வளப்படுத்தி மாணவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதே இந்தப் பயிற்சிச் செயலமர்வின் பிரதான நோக்கமாகும்.





# தாந்தாமலையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகள்

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தாந்தாமலை விவசாய போதனாசிரியர் பிரிவில் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்வு நேற்று (12) நடைபெற்றது.

தாந்தாமலை விவசாய போதனாசிரியர் வி.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரன், தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், பாடவிதான உத்தியோகத்தர்களான லக்ஸ்மன் மற்றும் மாறன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நவீன தொழில்நுட்பங்களுடன் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது, மாமரங்களை கத்தரித்து பழக்கப்படுத்துதல், முறையான பசளையிடல், வாழைச் செய்கையில் ஏற்படும் நோய் பீடைகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துதல், வாழைக் குட்டி பராமரிப்பு என்பன பற்றிய விளக்கங்கள் செய்து காட்டல்கள் மூலமாக விவசாய போதனாசிரியர்களால் தெளிவுபடுத்தப்பட்டன.








# மட்டக்களப்பு புனித சிசிலியா பாடசாலை விளையாட்டுப்போட்டி

(பழுவூரான்)

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையின் 2024 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்று செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றன.

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் வெபர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக அருட்தந்தை பிரகாஷ் ரெட்டி கலந்து கொண்டார்.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தோல் மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி நல்லரத்தினம் தமிழ்வண்ணனும், கௌரவ அதிதிகளாகக் கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தகம் மற்றும் முகாமைத்துவப் பொருளாதார பீட பேராசிரியர் டி.பவனும், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்வி உதவி உடற்கல்விப் பணிப்பாளர் வி.லவக்குமாரும் கலந்து கொண்டனர்.










# போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 30 இடங்களில் என்.ஐ.ஏ. சோதனை நடவடிக்கை

தீவிரவாதம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையாக இந்தியா முழுவதும் 30 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

போதைப் பொருள் கடத்தல் தலைவரான லாரன்ஸ் பிஷ்னோய் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு எதிராக கடந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டத்தின் கீழ் என்.ஐ.ஏ. வழக்கு பதிவு செய்தது.

இந்தியா முழுவதுவம் பல்வேறு மாநிலங்களில் இந்த கும்பல் செயல்பட்டு வருவதும் பஞ்சாபி பாடகர் சித்து மூஸ்வாலா மற்றும் பிரதீப் குமார் போன்ற மத மற்றும் சமூக தலைவர்களின் கொலைகள் உட்பட பல்வேறு கொடூர குற்றங்களில் இந்த கும்பல் ஈடுபட்டு வருவதும் விசாரணையில் தெரியவந்தது.

தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிக்கும் செயலிலும் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்களின் பல்வேறு சதிச் செயல்கள் பாகிஸ்தான், கனடா போன்ற வெளிநாடுகளில் இருந்தும் அல்லது இந்திய சிறைகளில் உள்ள தீவிரவாத கும்பல்களின் தலைவர்களாலும் திட்டமிடப்பட்டிருந்தது விசாரணையில் தெரியவந்தது.

தீவிரவாதிகள், குண்டர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் காரர்களின் இந்த கூட்டு சதித்திட்டங்களை தகர்க்கும் முயற்சியாக பஞ்சாப், ஹரியாணா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் சண்டிகரில் 30 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர். மாநில பொலிஸாருடன் இணைந்து நேற்று காலை முதல் இந்த சோதனை நடபெற்றது.

வழக்கில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அதிகாரிகள் இந்த சோதனை நடத்தினர். இந்த சோதனையில் லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலை சேர்ந்தவர்களின் 3 அசையா சொத்துகள் மற்றும் ஒரு அசையும் சொத்தை அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.

இந்த சொத்துகள் தீவிரவாதத்தால் ஈட்டிய வருவாயில் வாங்கப்பட்டதும், தொடர்ந்து தீவிரவாத செயல்களுக்கு இவை பயன்படுத்தப்பட்டு வருவதும் தெரியவந்ததால் இவை முடக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மக்களவைத் தேர்தலை முன்னிட்டு துணை இராணுவம் அணிவகுப்பு

மக்களவைத் தேர்தல் சில தினங்களில் அறிவிக்கப்பட உள்ளது. திகதி அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும். அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்த உடனேயே பிரசாரமும் சூடுபிடித்து விடும்.

எனவே, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்காக, அதற்கு முன்னதாகவே ஒவ்வொரு மாநிலத்துக்கும் துணை இராணுவப் படையினர் அனுப்பப்படுவார்கள். அந்த வகையில், தமிழகத்துக்கு 25 கொம்பெனியை சேர்ந்த துணை இராணுவ படையினர் வந்துள்ளனர்.



சென்னையை பொறுத்தவரை 2 கொம்பெனி துணை இராணுவப் படையினர் வந்துள்ளனர். அவர்களில் ஒரு தரப்பினர் எழும்பூரில் உள்ள சமூக நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் எழும்பூரில் தங்க வைக்கப்பட்டுள்ள துணை இராணுவப் படையினர் நேற்று மாலை மன்றோ சிலை அருகே எஸ். எம். நகரிலிருந்து எழும்பூர் வரை துப்பாக்கி ஏந்தியபடி அணிவகுப்பு நடத்தினர்.

இவர்களுடன் உள்ளூர் பொலிஸாரும் கலந்து கொண்டனர். எதிர்வரும் நாள்களிலும் இதேபோல் அணிவகுப்பு நடைபெறும் என துணை இராணுவப் படையினர் தெரிவித்துள்ளார்.




# போதை பொருள்களை கட்டுப்படுத்த தவறியதால் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வேண்டும்

## பழனிசாமி வலியுறுத்தல்

போதைப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்த தவறியதால் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தார்மிகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

போதைப் பொருள்கள் விற்பனையை தி.மு.க. அரசு தடுக்காததைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் தமிழகம் முழுவதும் நேற்று மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

சென்னையில் ராஜா அண்ணாமலைபுரம் காமராஜர் வீதியில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியும், நிர்வாகிகளும் கறுப்பு உடை அணிந்து பங்கேற்றனர்.

கட்சித் தொண்டர்கள் கையில் கொடிகள், போதைப் பொருள்களை தடுக்கத் தவறிய தி.மு.க. அரசைக் கண்டித்து எழுதப்பட்ட வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியபடி போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பழனிசாமி கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகம் போதைப் பொருள்கள் விற்பனை மையமாக மாறியுள்ளது. தி.மு.க. அயலக அணி அமைப்பாளராக இருந்த ஜாபர் சாதிக் பல ஆண்டுகளாக போதைப் பொருள்கள் விற்பனை செய்து பல ஆயிரம் கோடி சம்பாதித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாக செய்திகள் வருகின்றன. குறிப்பாக போதைப் பொருள்கள் கடத்தல் கும்பலுக்கும் முதல்வர் குடும்பத்துக்கும் தொடர்பு உள்ளது.

2019 ஆம் ஆண்டு மலேசியாவுக்கு போதைப் பொருள்கள் கடத்தியதாக ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது ஏற்கெனவே பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

கடந்த 10 நாள்களில் தமிழகத்தில் இராமேசுவரம் - மண்டபம், கொடுங்கையூர், புதுக்கோட்டை உள்ளிட்ட இடங்களில் போதைப் பொருள்களை மத்திய போதைப் பொருள்கள் தடுப்புப் பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தார்மிகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்.

போதைப் பொருள்கள் விற்பனையால் இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அடிமையாகின்றனர். போதைப் பொருள்களால் மாநிலத்தில் கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலை மாற வேண்டும். சட்டம், ஒழுங்கை காக்க தி.மு.க. அரசு தவறிவிட்டது.

2010 ஆம் ஆண்டு குடியுரிமை திருத்த சட்டத்துக்கு தமிழக சட்டப்பேரவையில் தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்தது. இந்த விவகாரத்தில் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது.” - என்றார்.

# ஆயுத இறக்குமதியில் இந்தியா முதலிடம்



இராணுவ தளவாட இறக்குமதியில் இந்தியா தொடர்ந்து முதல் இடம் வகித்து வருவதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, உலகளாவிய ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 9.8 வீதமாக உள்ளது.

இந்தப் பட்டியலில் 2 ஆவது இடத்தில் சவூதி அரேபியா (8.4 வீதம்), கத்தார் (7.6 வீதம்), உக்ரைன் (4.9 வீதம்), பாகிஸ்தான் (4.3 வீதம்), ஜப்பான் (4.1 வீதம்),எகிப்து (4 வீதம்), ஆஸ்ரேலியா (3.7 வீதம்), தென்கொரியா (3.1 வீதம்), சீனா 2.9 வீதமாக உள்ளன.

அதிகபட்சமாக ரஷ்யாவிடமிருந்து 36 வீதம் இறக்குமதி செய்கிறது. பிரான்ஸிடமிருந்து 33 வீதம், அமெரிக்காவிடமிருந்து 13 வீத ஆயுதத்தை இந்தியா இறக்குமதி செய்கிறது.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டுவரை இந்தியாவின் இறக்குமதி உலக மொத்த ஆயுத விற்பனையில் 11 சதவீதமாக இருந்தது.




# தீவிரவாதிகளுக்கு தடை விதிப்பதை தடுக்கும் 'வீட்டோ' அதிகார நாடுகள்

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா விமர்சனம்

ஐக்கிய நாடுகளில் வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகள் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி தீவிரவாதிகளின் பட்டியலை வெளியிடுவதை தடுக்கின்றன என ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

முன்னதாக, மும்பையில் நடைபெற்ற 26/11 தாக்குதலில் முக்கியக் குற்றவாளியான லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதி சஜித் மிர்ரை சர்வதேச பயங்கரவாதி என்று அறிவிக்கும்படி இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் முன்மொழிந்தன.

மும்பை தாக்குதலில் 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர், 300 பேர் படுகாயம் அடைந்தனர்.

இத்தகைய தீவிரவாத சம்பவத்தின் மூளையாக செயல்பட்டவரை தீவிரவாதி என்று அறிவிக்க விடாமல் சீனா சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தில் தனது 'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து நிறுத்தியது. இதுதொடர்பான நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க மறுத்தது. ஐ.நாவின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஒப்புதல் அளித்தால் மட்டுமே இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படும்.

இதுகுறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் நேற்று உரையாற்றுகையில்,

"உலகளவில் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களின் பட்டியலைக்கூட ஐ.நாவின் வீட்டோ அதிகாரம் பெற்றநாடுகள் வெளியிட மறுத்து வருகின்றன. இவ்வாறு வீட்டோ நாடுகள் செயல்படுவது என்பது தீவிரவாதத்தைத் தடுத்து நிறுத்துவதென்று இந்த சபை ஏற்றிருக்கும் கொள்கைக்கு விரோதமானது. ஐ.நா. சபை இரட்டை நிலைப்பாடு எடுப்பதற்கு இது சமமாகும்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய ஐ.நா. சபையில் நிறைவேற்றப்படும் முடிவுகள் சார்ந்த கூட்டங்களில் உறுப்பு நாடுகளுக்கு இடையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். ஐநா.வுக்கு பெரும் எண்ணிக்கையிலான அமைதிப் படை வீரர்களை அனுப்பிவரும் நாடு என்கிற முறையில், இந்த கோரிக்கையை முன்வைக்கிறேன்.

21 ஆம் நூற்றாண்டின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக இந்த சபை செயல்பட அவசியமான சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க அனைத்து வீட்டோ நாடுகளும் முன்வர வேண்டும்." - என்றார்.



# சம்பளத்தை பெறப்போவதில்லை; பாகிஸ்தான் ஜனாதிபதி அறிவிப்பு

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் காரணமாக தனது சம்பளத்தை பெறுவதில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி முடிவு செய்துள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் நிதி நிர்வாகத்தை ஊக்குவிக்கும் வகையில் அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

பாகிஸ்தான் திறைசேரிக்கு சுமையை ஏற்படுத்தாமல் இருப்பது அவசியம் என்று கருதியதால், ஜனாதிபதி தனது சம்பளத்தை பெறுவதில்லை என முடிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக, புதிதாக உள்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள மொஹ்சின் நக்வியும் தனது பதவிக்காலத்தில் சம்பளம் பெறுவதில்லை என முடிவு செய்துள்ளார்.



# ஆராய்ச்சிக்காக நிலத்தை தோண்டியபோது ஆயிரக்கணக்கான எலும்பு கூடுகள் மீட்பு

## ஜேர்மனியில் அதிர்ச்சி சம்பவம்

ஆராய்சிக்காக நிலத்தை தோண்டிய போது ஆயிரக்கணக்கான எலும்பு கூடுகள் ஒன்றன்மேல் ஒன்றாக கிடந்த தைக் கண்டு ஆய்வாளர்கள் அதிர்ச்சி யடைந்துள்ளனர்.

இந்த அதிர்ச்சி சம்பவம் ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது.

தொல்பொருள் ஆராய்சியாளர்கள், தங்களின் ஆராய்ச்சிக்காக மேற்கு ஜேர்மனியில் நியூரம்பெர்க் என்ற இடத்தில் தொல்பொருள் ஆய்வுக்காக நான்கு குழிகளைத்தோண்ட திட்டமிட்ட னர். இவ்வாறு அவர்கள் குழிகளை தோண்டியவேளை ஆயிரக்கணக்கான இறந்தவர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புகூடுகள் அனைத்தும் பிளேக் நோய் பாதிக்கப்பட்டு இறந்தவர்க ளாக இருக்கக்கூடம் என்று சந்தேகிக்கப் படுகிறது. இறந்தவர்கள் 15 ஆம் நூ ற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் களாக இருக்கலாம் என்று தொல் பொருள் ஆராய்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு குழியிலும் நூற்றுக் கணக்கான பெரியவர்கள் முதல் சிறி யவர்கள் வரை புதைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கணக்கிட்டப்படி, “ 3 குழிகள் முழுமையாக தோண்டிய நிலையில் மீதம் ஒரு குழி தோண்டவேண்டியுள்ளது” என்று தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நிறுவனமான இன் டெர்ரா வெரிட்டா ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“இது போன்ற ஒரு நிகழ்வு இது வரையில் நடந்ததில்லை இது குறித்து அனைத்து தகவல்களையும் பெறுவதற் கான நாங்கள் முயற்சி செய்து வருகி றோம்” என்று நகரின் பாரம்பரியப் பாது காப்புத்துறையைச் சேர்ந்த மெலனி லாங்பீன் தெரிவித்துள்ளார்.

இடப்பற்றாக்குறை காரணத்தால் இறந்தவர்களின் உடல்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அமர்ந்த நிலையிலும், இவர்களுக்கு இடையில் குழந்தைகளின் உடல்கள் அடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குழிகளிலும் சுமார் 300 இற்கு மேல் எலும்புகூடுகள் கண்டெடுக் கப்பட்டுள்ளன. இந்த எலும்புக்கூடுகளை ஆய்வுக்கு உட்படுத்தவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

# ஹவுதிகளின் ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியது இத்தாலி போர்க்கப்பல்

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியா ளர்களின் இரண்டு ஆளில்லா விமா னங்களை இத்தாலியின் போர்க்கப்பல் சுட்டு வீழ்தியுள்ளது.

இந்த தகவலை இத்தாலியின் வெளி யுறவு அமைச்சர் அன்டோனியோ தஜானி நேற்று உறுதிபடுத்தியுள்ளார்.

யேமனின் ஹவுதி கிளர்ச்சியா ளர்களின் தாக்குதல்களில் இருந்து செங்கடலில் வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு இத்தாலிய நாசகார போர்க்கப்பலான ஊயமை னுரடைமை அனுப்பி வைக் கப்பட்டது.அதேவேளை, கடந்த மாதம் தொடங் கப்பட்ட ஐரோப்பிய பணி யுளினைநள இன் ஒரு பகுதியாக இந்த கப்பல் ஹவுதியின் ட்ரோன்களை சுட்டு வீழ்த் தியுள்ளது.

அத்தோடு, செங்கடலில் சூயஸ் கால்வாய் மற்றும் மத்திய தரைக்கடல் நோக்கி பயணிக்கும் மேற்கத்திய



கப்பல்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள் இத்தாலிய பொருளாதாரம் பாதிக்கப்படலாம் என்று தஜானி எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், ஹவுதியின் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது தற்காப்பு நடவடிக்கை என இத்தாலிய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பக்கங்கள் 04
கனடா முரசு
புதன்கிழமை 13/03/2024

## மிசசாகா தீ விபத்தில் இருவர் உயிரிழந்தனர்

**மற்றொருவர் ஆபத்தான கட்டத்தில்**

ஒன்ராரியோ,மார்ச்13
மிசசாகா பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். C2



# வசந்த காலத்தின் ஆரம்பத்தின் முதலாவது வார இறுதியில் மழை

## தெற்கு ஒன்ராரியோ காலநிலை இது

**ஒன்ராரியோ,மார்ச்13**
**தெற்கு ஒன்ராரியோ இந்த வாரம் வசந்த காலத்தின் ஆரம்பத்தின், முதலாவது வார இறுதியில் மழை மற்றும் குளிர் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**இந்த வாரம் மேல் - மட்ட முகடுகளின் தாக்கத்துடன் சேர்ந்து தென்பகுதியை நோக்கிய காற்றானது புதன் கிழமை வெப்பநிலை அதிகரிப்புக்கு வழிவகுக்கும்.**

தெற்கு ஒன்ராரியோ பகுதியில் வெப்பநிலை 17 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கபடுகின்றது.

சில பகுதிகளில் 20 பாகை செல்சியஸ் வரை செல்லலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனினும், நாளை வியாழக்கிழமை வெப்பநிலை சற்று குறைந்து மிதமாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், வெள்ளிக்கிழமை மற்றும் வாரஇறுதியில் மழை, இடியுடன் கூடிய மழை என்பன காரணமாக தெற்கு ஒன்ராரியோவில் பனிப்பொழிவும் நிகழலாம் என எதிர்வுகூறப்படுகின்றது.

# புகலிடக் கோரிக்கையாளர்களை சமாளிக்க மேலதிக நிதி தாருங்கள்!

## மத்திய அரசைக் கோருகிறது ரிச்மன்ட் நகரம்

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்13
அதிகரித்து வரும் புகலிடக் கோரிக்கையாளர்களை சமாளிப்பதற்கு மேலதிக நிதி வழங்குமாறு ரிச்மன்ட் நகரம் மத்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தற்காலிக வீட்டுவசதிகளுக்கும், நகரத்தில் தங்குமிடங்களிற்கு கொடுப்பனவு வழங்குவதற்கும் இந்த நிதி தேவைப்படுவதாக ரிச்மன்ட் நகரம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் ரிச்மன்ட் நகரின் மூன்றில் ஒரு படுக்கைகள் இவர்களுக்காக பயன்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரிச்மன்ட் நகர சபையில் இது தொடர்பான பிரேரணை மார்ச் 12ஆம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



# குழப்பக் கும்பல்களை வேரோடு களைய ஹைட்டியில் இராணுவத் தலையீடே சரி

## ஐ.நாவுக்கான கனடாவின் தூதுவர் கருத்து

ஒன்ராரியோ,மார்ச்13

பல ஆண்டுகளாக கரீபியன் தேசத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி வரும் கும்பல்களை வேரோடு பிடுங்குவதற்கு ஹைட்டிக்கு கிடைத்துள்ள சிறந்த வாய்ப்பு இராணுவத் தலையீடுதான் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான கனடாவின் தூதுவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஆண்டனி பிளிங்கனுடன் சேர்ந்து பல கரீபியன் தலைவர்களுடன் ஜமைக்காவில் திங்கள்கிழமை நடந்த இந்தக் கூட்டத்தில் கனேடியத் தூதுவர் பொப் ரே கலந்து கொண்டார்.



இந்தக் கூட்டத்திற்குப் பிறகு, ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப் பட்டவுடன் பதவியை விட்டு விலகுவதற்கு ஹைட்டியின் பிரதமர் ஏரியல் ஹென்றி இணங்கினார்.

கனடா மற்றும் அதன் சகாக்களின் பல மாத அழுத்தத்திற்குப் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அரசாங்கம் ஹைட்டியின் அரசியல் பிரிவுகள் முழுவதிலும் இருந்து பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

அவர்கள் நாட்டின் பெரும் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள வன்முறை கும்பல்களை அழிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத் தலையீட்டை ஆதரிக்க ஒப்புக்கொண்டனர்.

# நெடுஞ்சாலை மேம்பால விபத்துக்கு இனிமேல் அதிகளவு அபராதங்கள்!

## பிரிட்டிஷ்கொலம்பிய அரசாங்கம் தீர்மானம்

பிரிட்டிஷ் கொம்பியா,மார்ச் 13

நெடுஞ்சாலை மேம்பாலங்களில் இடம்பெறும் விபத்துக்கு அதிகளவு அபராதங்களை விதிப்பதற்கு பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம், விபத்துக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.



வர்த்த நோக்குடைய வாகனங்கள் மேம்பாலங்கள் அல்லது பிற நெடுஞ்சாலை உள்கட்டமைப்புகளில் விபத்துக்குள்ளானதற்கான அபராதமாக 100,000 டொலர் வரை உயர்த்தவும், 18 மாதங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கவும் உள்ளதாக போக்குவரத்து அமைச்சர் ராப் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சி அமைச்சர் வணிகப் போக்குவரத்துச் சட்டத்தில் இந்த மாற்றங்களை முன்மொழிந்துள்ளார்.

இது தற்போது உயரம் கொண்ட வாகன விபத்துக்களுக்கு 500 டொலர் முதல் 598 டொலர் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

இது பல தசாப்தங்களாக மாறாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




**மிசசாகா...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயும், மூன்று பிள்ளைகளும் வசித்த வீட்டிலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த இருவரில் ஒருவர் அந்தப் பகுதியில் 40 வருடங்களாக வசித்த வந்த அலிஸ் என அயலவர்கள் அடையாளங் கண்டுள்ளனர்.

எனினும், உயிரிழந்த மற்றைய நபர் யார் என்பது இதுவரை அடையாளங் காணப்படவில்லை.

இந்த விபத்தில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.



# வென்கூவர் நகரில் இப்போது எஞ்சியுள்ள ஒரேயொரு கூடார தொகுதிக்கும் மூடுவிழா

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்13

வென்கூவர் நகரின் ஒரேயொரு கூடார தொகுதியானது தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

கிராப் பூங்காவில் அமைந்துள்ள இந்தக் கூடாரங்களை மார்ச் 25ஆம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வென்கூவர் நகரத்தின் பிரதி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த பூங்காவை சுத்தம் செய்வதற்காக இந்தக் கூடாரங்கள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் பூங்காவை பரிசோதித்த ஊழியர்கள் கைகளால் பூங்காவை சுத்தம் செய்வது கடினம் என கண்டறிந்ததாகவும், அதன் காரணமாகவே பூங்காவை தற்காலிகமாக மூடி, இயந்திரங்களைப் பயன்படுத்தி சுத்தம் செய்வதற்கு திட்டமிடுள்ளதாகவும் பூங்கா நிர்வாகம் தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும், இந்தப் பூங்காவில் உள்ள கூடாரங்களை பகுதி பகுதியாக சுத்தம் செய்யுமாறு அங்கு தங்கியுள் ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வென்கூவரின் ஏனைய பகுதிகளில் உள்ள கூடாரங்கள் தற்காலிகமாக மூடப்படுவதாக முதலில் கூறப்பட்ட போதிலும், இறுதியில் அவை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளமையால், தமது கூடாரங்களுக்கும் இதேகதி ஏற்படலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர்.



# 11 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறையுடன் கியூபெக் அரசாங்கம் வரவு - செலவுத் திட்டம்

கியூபெக்,மார்ச்13

11 பில்லியன் டொலர்கள் பற்றாக் குறையுடன் கியூபெக் அரசாங்கம் வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது.

வரலாற்றில் மிகவும் மோசமான காட்டுத் தீ பருவ காலம், பொது சேவைகளின் சம்பள அதிகரிப்பு என்பனவே இந்த வரவு – செலவுத் திட்டத்தின் பற்றாக்குறைக்கு வழிகோலிய பிரதான காரணங்க எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் மாநிலத்தின் நிதி நிலைமை எப்போது கட்டுக்குள் கொண்டு வரப்படும் என்கிற எதிர்வுகூறல் இன்றி சமர்ப்பிக்கப்பட்ட மிகவும் மோசமான வரவு – செலவுத் திட்டமாக 2024-25இற்கான வரவு செலவுத் திட்டம் பார்க்கப்படுகின்றது.

எனினும், அடுத்த வருடத்தில் மாநிலத்தின் பொருளாதார நிலை மேம்படும் என கியூபெக்கின் நிதி அமைச்சர் எரிக் கிர்ராட் தெரிவித்துள்ளார்.

# ரிஜன்ட் பார்க்கில் இருவர் நேற்று சுட்டுக் கொலை; பெண் காயம்!

ஒன்ராரியோ,மார்ச்13

ரிஜன்ட் பார்க் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மாரச் 12ஆம் திகதி மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆண் சந்தேகநபர் ஒருவர் தமது உறவினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்ப டுகின்றது.

நேற்று மாரச் 12ஆம் திகதி பிற்பகல் 1.30 அளவில் தமக்கு கிடைத்த அவசர அழைப்பைத் தொடர்ந்து சம்பவ இடத் திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கான இரு ஆண் களையும், ஒரு பெண்ணையும் சம்பவ இடத்தில் கண்டுள்ளனர்.

அந்த ஆண்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும், மற்றைய ஆண் வைத்தியசாலைக்கு



கொண்டு சென்றதன் பின்னர் உயிரிழந் தார் எனவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

எனினும், இந்த சம்பவத்தில் காயம டைந்த பெண்ணுக்கு உயிருக்கு அச் சுறுத்தல் தரும் காயங்கள் எதுவும் இல்லை எனப்பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர்.

சந்தேகநபரை பிடிப்பதற்காக விரட்டிச் சென்ற வேளையில் இடம்பெற்ற மோதலில் இரு பொலிஸார் காயமடைந்த போதிலும், சந்தேகநபர் பிடிக்கப்பட் டார் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

# பலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களால் சர்ரே நகரசபை செயற்பாடுகள் பாதிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 13

சர்ரே நகரசபை உறுப்பினர்களின் நாளாந்த நடவடிக்கைகள் பலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

மார்ச் 12ஆம் திகதி சர்ரே நகர சபைக்கு அருகில் அணி திரண்ட பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்கள், நகர சபை உறுப்பினர்கள் நகர சபைக்குள் பிரவேசிக்க முடி யாதவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், நகர சபை உறுப்பினர்களின் பங்குபற்றல் தற்காலிகமாக தடைப்பட்டது.

இதன் காரணமாக பொது மக்களை நகர சபைக்குள் அனுமதிப்பதில் வரையறைகளை விதிப்பதாக நகர மேயர் பிரன்டா லொக் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்கள் நகர சபையின் நடவடிக்கைகளுக்கு



தடை ஏற்படுத்தி வருவதாகவும், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பொது மக்கள் அணுகலில் கட்டுப்பாட்டை விதிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# செல்லப் பூனையைக் கண்டுபிடித்து தந்தால் 10ஆயிரம் டொலர் வெகுமதி

ஒன்ராரியோ,மார்ச்13

காணாமல் போன தமது செல்லப்பிராணியான பூனையை கண்டுபிடித்து தருபவர்களுக்கு 10,000 டொலர்கள் பரிசினை டொரன்டோவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் அறிவித் துள்ளார்.

ஒன்பது மாதங்கள் வயதான சவன்னா வகை பூனையானது டொரன்டோவின் காசா லாமா பகுதியில் கடந்த மார்ச் 5ஆம் திகதி காலை காணாமல் போனது.

இந்தப் பூனையின் உரிமையாளர் அமெலியா மேல்டேப்.

மைக் என்று பெயரிடப்பட்ட இந்தப் பூனை மூன்று மாதங்களுக்கு முன்னர் தம்மிடம் வந்ததாகவும், வீட்டிற்கு பணிக்கு வந்தவர் கதவினை முழுமையாக மூடாது வைத் திருந்த நிலையில் பூனை வெளியில் சென்று விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.



தமது பூனையின் படத்தை சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளியிட்டுள்ள அமெலியா, அதனைக் கண்டுபிடித்து தருபவர்களுக்கு 10,000 டொலர்கள் வழங்க வுள்ளார் எனக் கூறியுள்ளார்.